JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OFJUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | 277-2010 |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | P.W.8 | Prosecution /Defence / Court | |
| Name | Deepa | Caste | |
| Father's Name | W/o.Karthikeyan | Calling | |
| Village | Veeranampalayam, Seenapuram | Religion | |
| Taluk | Perundurai. | Age | |

(**Accused absent**. **For Accused**, **petition U/s**.317 **Cr**.**P**.**C**. **filed and allowed**)
Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of 16.11.2023

**முதல் விசாரணை**

1)நான் மேற்கண்ட விலாசத்தில் குடியிருந்துகொண்டு நான் இல்லத்தரசியாக உள்ளேன். கடந்த 06.10.2009 ம் தேதி மதியம் 01.30 மணிக்கு பெருந்துறை குன்னத்தூர் ரோட்டில் உள்ள ராதா வெள்ளிமஹால் நகைக்கடைக்கு 5 பெண்கள் வந்து வெள்ளி கொலுசை எடுத்துக் காண்பிக்குமாறு கேட்டுக் கொண்டதால் எங்கள் கடையில் பணிபுரிபவர்களும், நானும் அவர்களுக்கு கொலுசுகளை எடுத்து காண்பித்துக் கொண்டிருந்தோம். அவ்வாறு நாங்கள் அவர்களுக்கு வெள்ளி கொலுசை காட்டிக் கொண்டிருக்கும்போதே 5 கிலோ எடையுள்ள வெள்ளி கொலுசுகளை எடுத்துக் கொண்டார்கள். எங்கள் கடைக்கு வந்த 5 பெண்மணிகளையும் எனக்கு அடையாளம் தெரியும். இது சம்மந்தமாக எங்கள் நகைக்கடை ஓனர் சத்தியமூர்த்தி என்பவர் பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

2) பின்னர் 02.02.2010 ம் தேதியன்று கொடுமுடி காவல் நிலையத்தில் கைது செய்து வைத்திருப்பதாக பெருந்துறை காவல் நிலையத்தில் இருந்து

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

எங்களுக்கு தகவல் கிடைத்தது. அதன் பின்னர் எங்கள் கடையின் ஓனர் சத்தியமூர்த்தியும், நானும் எங்கள் கடையில் பணிபுரிந்தவர்களும் கொடுமுடி காவல் நிலையத்திற்கு சென்றோம். கொடுமுடி காவல் நிலையத்தில் காண்பித்த கொலுசுகளை நாங்கள் அடையாளம் காட்டினோம். பெருந்துறை காவல் நிலையத்திலும் இதைப் பற்றி விசாரிக்க நாங்கள் வெள்ளி கொலுசுகளை அடையாளம் காட்டிய விவரத்தை பற்றி கூறினோம். இது சம்பந்தமாக பெருந்துறை காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரிக்க எனக்கு தெரிந்த விவரங்களையும், நடந்த விவரங்களையும் கூறினேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1) திருடுபோனதாக சொல்லும் க்டையில் எத்தனை வருடமாக வேலை செய்தேன் என்றால் 3 வருடங்களாக வேலை செய்தேன். அந்த கடையில் தங்கம் மற்றும் வெள்ளி விற்பனை செய்தார்களா என்றால் வெள்ளி மட்டும்தான் விற்பனை செய்தார்கள். கடையின் பெயர் என்னவென்றால் ராதா வெள்ளி மாளிகை. அந்த கடையில் ஆண்கள் எத்தனைபேர், பெண்கள் எத்தனை பேர் என்றால் இரண்டு பெண்கள், ஒரு ஆண் பணிபுரிந்தோம். அவர்கள் பெயர் தெரியுமா என்றால் தற்போது ஞாபகமில்லை.

2) பொதுவாக தங்கம் மற்றும் வெள்ளி நகைகளில் கடையின் முத்திரை வைப்பார்கள் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த கடையில் RD என்ற முத்திரை வைப்பார்கள். களவு போனதாக சொன்ன 06.10.2009 ம் தேதி நான் புகார் கொடுத்தேனா என்றால் நான் புகார் கொடுக்கவில்லை. எனது முதலாளிதான் புகார் கொடுத்தார். வழக்கு சொத்து காணாமல் போனதாக எப்போது தெரிந்து கொண்டோம் என்றால் கடைக்கு வந்த பெண்கள் கடையில் இருந்து சென்று 1/2 மணி நேரம் கழித்து தெரிந்து கொண்டோம். ராதா வெள்ளி மாளிகை கடைக்கும், காவல் நிலையத்திற்கும் சுமார் 1/2

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).

கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். புகார் கொடுத்த 06.10.2009 ம் தேதி மதியம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் சரிதான்.

3) அன்றைய தினம் கடைக்கு நிறைய வாடிக்கையாளர்கள் வந்து சென்றார்கள் என்றால் சரிதான். அந்த வகையில் 5 நபர்களும் வந்திருந்தார்கள். சந்தேகத்தின் பேரில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி கடையில் வருகைப் பதிவேடு உள்ளதா என்றால் இல்லை. கடையில் காமாட்சி விளக்கு, குத்துவிளக்கு போன்ற வெள்ளிபொருட்களின் இருப்பு பதிவேடு உள்ளது என்றால் சரிதான். எதிரிகளின் அங்க அடையாளம் போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் இல்லை.

4) போலீசார் விசாரிக்கும்போது எந்தெந்த வகை மாடல் கொலுசுகள் எத்தனை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். கொடுமுடி காவல் நிலையத்தில் யாருடன் சென்றேன் என்றால் கடை முதலாளியுடன் அவர் வாகனத்தில் சென்றோம். வழக்கு சம்மந்தமாக சாட்சி அளிக்க கூறி முதலாளி சொன்னாரா என்றால் சொன்னார். போலீசார் என்னிடம் நகைகளை காட்டி அடையாளம் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும், எனது முதலாளி கூறியதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை(FAC).